OS 50/2021
பி.வா.சா. 1 சந்திரன் த/பெ பெருமாள்
நாள் 25.06.2025

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. 1ம் வாதி ராஜேஸ்வரி எனக்கு என்ன உறவு என்றால் எனது தங்கை ஆவார். 2 முதல் 4 வாதிகள் எனது உடன் பிறந்த தம்பிகள் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி என் மனைவி. நான் முதல் பிரதிவாதி ஆவேன். தாவா சொத்துகள் அனைத்தும் என் அப்பா சுயமாக வாங்கிய சொத்துகள் என்றால் இல்லை நான் வாங்கிய சொத்துகள். என் பெயரில் வாங்கியதற்கான ஆவணங்கள் இருக்கிறதா என்றால் நான் என் அம்மா பெயரில் வாங்கி வைத்தேன். வா.சா.ஆ1 மூலம் என் தகப்பனார் பெருமாள், பெரிய தாயம்மாள், அம்மாக்கண்ணு ஆகியோர் பெயரில் சொத்து வாங்கப்பட்டது என்றால் சரிதான். நான் 1951 செப்டம்பர் 10ம் தேதி பிறந்தேன். வா.சா.ஆ 1 மூலம் சொத்து வாங்கிய பிறகு தான் நான் பிறந்து இருக்கிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ2 ன் மூலம் வழக்கு 5 மற்றும் 6 அயிட்ட சொத்துகள் எனது தகப்பனார் பெயரில் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தான் வாங்கி கொடுத்தேன். நான் 8ம் வகுப்பு படித்திருக்கிறேன். நான் 1968 முதல் 1971 வரை பொதுப்பணித்துறையில் கேங்மேனாக வேலை செய்தேன். 1971 டிசம்பரில் இருந்து 1995 டிசம்பர் வரை இராணுவத்தில் வேலை செய்தேன். 1978ல் எனக்கு என்ன வயது இருக்கும் என்றால் 21 வயது இருக்கும்.